## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 61/2023 |
| P.W. | : 13 |
| Name. | : திரு.வேலுச்சாமி |
| Father/Husband Name | : திரு. ஆறுமுகம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.03.2026.

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் காவல் துணை கண்காணிப்பாளராக இருந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 03.03.2021ம் அன்று நான் புளியம்பட்டி காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்து சமயம் நிலைய குற்ற எண். 71/21 இ.த.சட்டப்பிரிவு 302 வழக்கு கோப்பை எனக்கு முன்பு பணியிலிருந்த காவல் ஆய்வாளர் நாகலட்சுமி அவர்கள் பணி மாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பை நான் பெற்று 15.03.2021 அன்று சாட்சிகள் கணேசன், சுப்பு நாயக்கர், வேலுச்சாமி, வசந்தி ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 16.07.2021 ல் கோவை தடய அறிவியல் துறைக்கு உடனடியாக அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுகோள் கடிதம்

கொடுத்தேன். 16.09.20211 அன்று சாட்சிகள் மருத்துவர், கே.தயாநிதி, மருத்துவர் திரு.எஸ்.சங்கர், தடய அறிவியல் ஆய்வறிக்கை அறிவியல் ஆய்வாளர் திரு.சிவசுப்ரமணியம், முதல் நிலை காவலர் வி.கே.செந்தில,. தலைமை காவலர் பழனிச்சாமி, உதவிஆய்வாளர் வசந்தகுமார் ஆகியோர்கைளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். உதவி இயக்குநர் அரசு குற்ற தொடர்பு துறை அவர்களிடமிருந்து 30.11.2021 அன்று மாதிரி குற்ற அறிக்கையை பெற்று எதிரிக்கு எதிராக இ.த.சட்டபிரிவு 302 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி வசந்தி என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அவர் சம்பவ இடத்தை நேரில் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி சுப்புநாயக்கர் எனது விசாரணையில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளார். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு நேரில் பார்த்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சாட்சி வேலுச்சாமி எனது விசாரணையில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவர் தயாநிதி இறந்துபோன மகேந்திரன் என்பவரது உடலை எங்களது கடிதத்தின் பேரில் சவக்கிடங்கில் வைத்துள்ளார் என்றால் சரிதான். மருத்துவர் எஸ்.சங்கர் தனது இறுதி கருத்துரையில் இறந்துபோன நபருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தால் தான் அவர் இறந்துபோயுள்ளார் என்று எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலால் உதைத்ததாலும், தலையில் அடித்ததாலும் இறந்துவிட்டார் என்று குறிப்பு உள்ளதா என்றால் கையால் அடித்ததாகவும், காலால் உதைத்ததாகவும், தலையில்

அடித்ததாகவும் குறிப்பு இல்லை என்றால் சரிதான். வழக்கு பற்றி பொதுநாட்குறிப்பில் பதிவு செய்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பு எதுவும் இல்லை என்றால் ஆமாம். நான் சாட்சிகளை சரிவர விசாரிக்காமலும், வழக்கு கோப்புகளை ஆராயாமலும், தவறாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைக்கு ஆதரவாக தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.